Department ... FEB 2010 ... Chennai - 600 009

001804 E1/6236/05

## சுருக்கம்

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம், 1961 – இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் – தி/ள். அழகன் சால்ட் நிறுவனத்தின் – பிரிவு 37–அ ன்கீழ் அரசுக்கு அனுமதி கோரியது – நிராகரிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்துறை

அரசு ஆணை (நிலை) எண்.41 நாள்:28.1.2010

படிக்கவும்:

1. தி/ள். அழகன் சால்ட் நிறுவனம் – 37–அ ன்கீழ் மனு நாள் 4.4.2005.
2. அரசு கடித எண்.17592/நி.சீ.2–2/05 வருவாய்த்துறை, நாள் 29,4,05.
3. நிலச்சீர்திருத்த இயக்குநர், சென்னை–5, கடித எண்.ஈ1/6236/05(நி.சீ.) நாள் 23.9.2009.

-----

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தி/ள். அழகன் சால்ட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் பள்ளமோர்குளம் கிராமத்தில் கிரையம் பெற்ற நில உச்சவரம்பிற்கு மிகுதியான 123.42 ஏக்கர் நிலத்தினை வைத்துக் கொள்ள தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம், 1961 விதி 37–அ ன்கீழ் அரசுக்கு விண்ணப்பம் செய்திருந்தது. அம்மனுவினை தொழில் விலக்களிப்பு குழுவின் முன் வைத்து, அவர்களின் கருத்தினை பெற்று, அறிக்கையினை அனுப்புமாறு நிலச்சீர்திருத்த ஆணையரை பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட நிலச்சீர்திருத்த இயக்குநர் அறிக்கையில் மனுதாரர் நிறுவனத்தின் மனு, தொழில் விலக்களிப்பு குழுவின் முன் 10.9.2009 வைக்கப்பட்டது என்றும், விண்ணப்பதாரர் "அழகன் சால்ட் கம்பெனி" என்ற பெயரில் உப்பளம் அமைத்து செயல்பட்டு வந்துள்ளதாகவும் ஆனால் புலத்தணிக்கையின் போது இப்புலங்கள் யாவும் உப்பு உற்பத்தி ஏதும் நடைபெறாமல் தரிசாகவே உள்ளது என்றும் அனுமதி கோரிய புலங்கள் அனைத்தும் தூத்துக்குடியைச் சேர்ந்த மாரியப்ப நாடார் மக்கள் மோகன் மற்றும் மூவர் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும் ' அழகன் சால்ட் கம்பெனி ' நிறுவனத்தாரால் பிரிவு 37–அ வின் கீழ் அனுமதி கோரி விண்ணப்பித்த பிறகு மேற்கண்ட நிலங்கள் அனைத்தும் வேறு நபர்களுக்கு கிரையம் செய்யப்பட்டு உள்ளது என்றும், இது குறித்து இராமநாதபுரம் நிலச்சீர்திருத்த தனி வருவாய் ஆய்வாளர் விசாரணைச் செய்து மேற்படி புலங்கள் தூத்துக்குடியைச் சார்ந்த மாரியப்பநாடார் மக்கள் மோகன் பெயரில் 42.28.0 ஹெக்டேர் நிலமும், மனோகரன் பெயரில் 47.29.5 ஹெக்டேர் நிலமும், மாதவன் பெயரில் 42.98.0 ஹெக்டேர் நிலமும், மகேந்திரன் பெயரில் 43.27.0 ஹெக்டேர் நிலமும் தற்போது கிராமக்கணக்குகளில் தாக்கலாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. மனுதாரர் பெயரில் உப்பளத்திற்காக விண்ணபித்த நிலம் இருக்கவில்லை என்று ஆய்வின்போது அறியப்பட்டுள்ளதாகவும், தெரிவித்துள்ளார். எனவே

அவர்கள் விண்ணப்பத்தை நிராகரிக்கவும், நிலச்சீர்திருத்த விதிகளுக்கு புறம்பாக மிகுதி நிலம் வைத்திருக்கும் நபர்கள்மீது நிலச்சீர்திருத்த விதி 20ன்கீழ் நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைத்துள்ளது. நிலச்சீர்திருத்த இயக்குநர், தொழில் விலக்களிப்பு குழுவின் பரிந்துரையை ஏற்கலாம் என தனது அறிக்கையில் அரசுக்கும் பரிந்துரைச் செய்துள்ளார். மேலும் கடந்த 5 ஆண்டுகளாக திட்டத்தினை செயல்படுத்த ஆக்கப்பூர்வமான எந்த வேலைகளையும் செய்யவில்லை என்றும் தொழில் மற்றும் வியாபார செயல்பாடுகள் அற்ற விவசாய சாகுபடி நோக்கத்திற்காக நிலஉச்சவரம்பு சட்டத்தின் கீழ் அனுமதி அளிக்க விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை என்றும், அதனால், மனுதாரர் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், பள்ளமோர்குளம் கிராமத்தில் உப்பளம் அமைக்கும் நோக்கத்திற்காக நில உச்சவரம்பு சட்டம் விதி 37–அ ன்கீழ் அனுமதி அளிக்க கோரிய மனுவை நிராகரிக்கலாம் என்று தொழில் விலக்களிப்பு குழு கருத்துரை தெரிவித்திருந்தது.

3. மேற்குறிப்பிட்ட தொழில் விலக்களிப்பு குழுவின் கருத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், பள்ளமோர்குளம் கிராமத்தில் நில உச்சவரம்பு சட்டம் பிரிவு 37–அ ன்கீழ் மனுதாரர் நிறுவனம் விலக்களிக்க கோரிய மனுவை நிராகரிக்கலாம் என நிலச்சீர்திருத்த இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்து பார்வை மூன்றில் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் தெரிவித்தார்.

4. நிலச்சீர்திருத்த இயக்குநரின் கருத்துருவினை கவனமாக அரசு ஆய்வு செய்து அதனை ஏற்றுக் கொண்டு தி/ள். அழகன் சால்ட் நிறுவனத்தின் மனுவினை நிராகரிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்

1. தி/ள். அழகன் சால்ட் நிறுவனம்,
   ஏ.கே.எஸ். காம்ப்ளக்ஸ்,
   ஆர்.ஆர். சேதுபதி நகர், இராமநாதபுரம் 623 501.
2. நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
3. நிலச்சீர்திருத்த இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
4. உதவி ஆணையர், (நிலச்சீர்திருத்தம்)
5. வைப்பு கோப்பு / இ.கோ.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்